**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 138/2012 Date:13.08.2025**

**(DW1)- பன்னீர்செல்வம்**

<u>வாதி தரப்பு **குறுக்கு விசாரணை**</u>

**1.** 1, 2 வாதிகள் எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்பதை நேரில் சென்று ஆய்வு செய்தேனா என்றால் செய்யவில்லை. 1, 2 வாதிகளின் இருப்பிட சான்றிதழ்களை இது வரை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. 1, 2 வாதிகள் எந்த ஊரில் வசித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என்ன பதவியில் உள்ளேன் என்றால் நெட்டாங்கோடு ஊராட்சி , துணை வட்டார வளர்ச்சி அலுவலராக உள்ளேன். நெட்டாங்கோடு பஞ்சாயத்தின் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. நெட்டாங்கோடு பஞ்சாயத்திற்குள் எந்தெந்த கிராமங்கள் வருகிறது என்றால் 8 கிராமங்கள் வருகிறது. செருப்பங்கோடு கிராமம் நெட்டாங்கோடு பஞ்சாயத்திற்குள் உள்ளதா என்றால் இல்லை.

**2.** நெட்டாங்கோடு பஞ்சாயத்திற்குட்பட்ட ஊர்களை அடக்கி உள்ள வரைப்படத்தை நான் பார்த்ததுண்டா என்றால் பார்க்கவில்லை. செல்லம் நாடார் மகன் ராஜன், ஆதிச்சன் மகன் நாராயணன், பாலையன் மகன் ஸ்ரீனிவாசன், செல்லத்துரை மகன் சுதாகர் ஆகியோர்களை எனக்கு தெரியாது என்றாலும் அவர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்க்கவில்லையென்றாலும் சரிதான், நான் பதவியேற்று ஒரு வாரக்காலம் தான் ஆகிறது. மேற்குறிப்பிட்ட நபர்களின் வீடு எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்குறிப்பிட்ட நபர்களின் வீட்டிற்கு பஞ்சாயத்தின் அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**3.** ஒரு ஊரின் பெயரை மாற்றவோ, பஞ்சாயத்தோடு இணைக்கவோ எனக்கு அதிகாரம் இல்லையென்றால் சரிதான். ஊரில் சாதிவாரியாக எத்தனை மக்கள்

உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நெட்டாங்கோடு பஞ்சாயத்திற்குட்பட்ட 8 கிராமங்களை தவிர்த்து வேறு கிராமத்திற்கு நான் வரி வசூல் செய்ய முடியாது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றாலும் இந்த வழக்கு அனுமதிக்கப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

**1.** பிவாசாஆ. 1 ஆவணத்தின் படி நெட்டாங்கோடு செல்லும் சாலை முதலில் வருகிறது என்றால் சரிதான். அதை தாண்டி செருப்பங்கோடு கம்பிபாலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி அருள்மிகு சிவ சுடலைமாடன் சுவாமி திருக்கோவில் செருப்பங்கோடு உள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி வரும் போது ஸ்ரீபத்திர காளியம்மன் கோவில் , செருப்பங்கோடு அமைந்துள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி உள்ள பாலத்திற்கு செருப்பங்கோடு என்று பெயர் என்றால் சரிதான். அதிலிருந்து சிறிது தொலைவில் ஐயா கோவில், செருப்பங்கோடு உள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி வரும் போது வலது பக்கம் புளியடிவிளைக்கு செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். செருப்பங்கோடு பாலத்திலிருந்து புளியடிவிளைக்கு செல்லும் சாலை வரை உள்ள இடம் செருப்பங்கோடு என்ற பெயரில் பயன்பாட்டில் உள்ளது என்றால் சரிதான்.

**2.** மேற்படி பகுதிகள் அனைத்தும் புலஎண்கள் 215,216,217 ல் அடங்கும் என்றால் சரிதான். புளியடிவிளைக்கு செல்லும் சாலைக்கு அடுத்து இலந்தவிளை செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். இலந்தவிளையை தாண்டி சுப்பிரமணியபுரம் உள்ளது என்றால் சரிதான். சுப்பிரமணியபுரத்தை தாண்டி நங்கன்விளை அமைந்துள்ளது என்றால் சரிதான். நங்கன்விளையிலிருந்து 3 கிராமங்கள் தாண்டி உள்ள செருப்பங்கோட்டிற்கு உரிமை கொண்டாட நங்கன்விளை மக்களால் முடியாது

என்றால் சரிதான். ஒரு கிராமத்தின் பெயரை ஒரு தனிநபரின் மனுவின் அடிப்படையில் மாற்ற முடியாது என்றால் சரிதான்.

**3.** அது அரசால் அங்கீகரிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டு வழிகாட்டுதல்களை பின்பற்றி எடுக்கப்பட வேண்டிய முடிவு என்றால் சரிதான். நங்கன்விளை என்ற ஊரை விரிவாக்கம் செய்வதற்கு அரசை தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது என்றால் சரிதான். புலஎண்கள் 215,216,217 செருப்பங்கோடு மேற்கில் உள்ளது என்றால் சரிதான். 2020 ம் ஆண்டு வரை மேற்படி பகுதியில் உள்ள மக்களுக்கு செருப்பங்கோடு மேற்கு என்ற ஊரின் பெயரில் வரி வசூல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இனிமேலும் மேற்படி செருப்பங்கோடு மேற்கு என்ற ஊரின் பெயரில் வரி வசூல் செய்யப்படுவதில் எந்த ஆட்சேபணையுமில்லையென்றால் சரிதான்.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்